Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

Y.M.C.A.

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 6    (18.02.94)    வெள்ளிக்கிழமை    ஓசை 365

## கப்பல் கட்டணத்தினால் மாவின் விலை 4 ரூபா அதிகரிக்கும்

''ஹொரந்தல' என்னும் கப்பல் 1950மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித் துறை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார். மேற்படி அவ்வறிவித்தலில் இக் கப்பலுக்கான கட்டணத்தை அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றி அரசாங்க அதிபர் தெரிவிக்கையில்; இலவச நிவாரண உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய உணவுப் பொருள்களை கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு கப்பல் கட்டணம் செலுத்த வேண்டுமென தனக்கு அறிவித்துள்ளதாகவும் இக் கட்டணம் செலுத்துவதற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்

# ஐ.தே.கவின் முகவர் நிலையங்களாக இராணுவ, பொலிஸ் முகாம்கள்

## அஷ்ரப் பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் முகவர் காரியாலயங்களாகச் செயற்படுவதாகவும் முஸ்லிம் மக்கள் ஐ. தே. கவிற்கு வாக்களிக்குமாறு இராணுவத்தினரால் மிரட்டப்படுவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம். எச். அஷ்ரப் அரசாங்கம் மீது பகிரங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

பத்திரிகையாளர் சந்தித்துப் பேசியபோதே அஷ்ரப் இப் பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகவர் காரியாலயமாக செயற்படுவதாகவும், எனவே கிழக்கு மாகாணத்தில் ஒரு சுதந்திர தேர்தலைக் காணமுடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் வாக்காளர் ஐக்

### மோட்டார் ஊர்திப் பதிவு மேற்கொள்ளாத

## ஊர்தி உரிமையாளர் மீது 22க்கு பின் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள மோட்டார் ஊர்திகளை இதுவரை பதிவுக்குட் படுத்தாதவர்களும், இயந்திரம், அடிச்சட்டம் முதலிய பாகங்களை பதிவுக்குட் படுத்தாதவர்களும் எதிர்வரும் 22-02-94 செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், 1993 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் பதிவு செய்த மோட்டார் ஊர்திகளின் பதிவுச் சான்றிதழ், பாவனைக்கில்லாததற்கான சான்றிதழ், வரியட்டை பெற்றுக்கொள்ளாதவர்கள் 22-02-94க்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும், இதுவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காதவர்களினதும் பதிவுகள் எதிர்வரும் 22-2-94

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதவி வெற்றிடங்கள்

தொலைத்தொடர்பு பரிசோதகர் பதவி, ஆயுர்வேத திணைக்கள ஆரம்ப தர 'ஆ' பிரிவிற்கான வைத்திய அதிகாரி பதவி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதான போட்டிப் பரீட்சை, நாட்டு வரிப்பரிசோதகர் பதவி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச்சபை விவசாய (தரவுத்தேர்வு) டிப்ளோமா தாரர்களை உதவி ஆசிரியர்களாக ஆட்சேர்த்தல் ஆகிய விடயங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளன.

அதனை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் ஈழநாதம் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

## ஈழநாதம் 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

ஈழநாதம் நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக 26 பக்கங்களுடன் நாளை வெளிவருகிறது. இதில் தத்துவம், சமூகம், இலக்கியம், அரசியல், விளையாட்டு என்பன சார்ந்த கட்டுரைகள் என்பவற்றுடன் சிறுகதைகள், கவிதைகள் என்பன அடங்கியுள்ளன. உங்கள் பிரதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

## யாழ். மாவட்ட தபால்கள்

# நாச்சிக்குடாவில் இரண்டாவது நாளாக 'புக்காரா' குண்டுவீச்சுத் தாக்குதல்

## ஒருவர் பலி; கடைகள் வீடுகள் தரைமட்டம்

(நமது நிருபர்)

நாச்சிக்குடாவில் நேற்று முன்தினம் புக்காரா போர் விமானம் மேற்கொண்ட குண்டுவீச்சுத்தாக்குதலுக்கு ஒருவர் பலியானார் இருவர் படுகாயமடைந்தனர். வீடுகள் கடைகள் தரைமட்டமாகின.

சிறிலங்கா வான்படை போர்விமானங்கள் நேற்று முன்தினம் மாலை 3.00மணியளவில் 7 குண்டுகளை இப்பகுதியில் வீசித்தள்ளின. இக்குண்டுகளில் ஒன்று அருமைநாயகம் என்பவரின் தேநீர் கடைக்கு முன்னால் விழ்ந்து வெடித்ததில் அவர் அந்த இடத்திலேயே பலியானார். கடையும் சேதமடைந்தது இவரது தேநீர்க்கடைக்கு பின்புறம் முதல்நாள் வீசிய குண்டுக்கு சேதமடைந்ததாகவும் நேற்று முன்தினம் வீசிய குண்டிற்கு இக்கடை முற்றாக சேதமடைந்ததாகவும் குண்டுவீச்சின் போது காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வேலன் பொன்னுத்துரை (வயது 46) என்பவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் மரணமடைந்தவருக்கு சொந்தமான புடைவைகடை ஒன்றும் சேதமடைந்ததாகவும் மற்றையகுண்டுகள்குடிமனைக்குள் வீழ்ந்து வெடித்ததால் 4 வீடுகள் தரைமட்டமானதாகவும் பல வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிவித்தார். இத்தாக்குதலின்போது காயமடைந்த மற்றைய நபர் பாலன் அஸ்ரின் (வயது 56)

(4ஆம் பக்கம் பார்க்க)

# விமானக்குண்டு தாக்குதலினால் வலி வடக்கு பகுதி அதிர்ந்தது

## காலை முதல் மாலை வரை தொடர்ந்தது

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கு பகுதிகள் மீது குண்டு வீச்சு விமானங்கள் நேற்று காலை முதல்மாலைவரைகுண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டதோடு, பலாலியிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

வலிகாமம் வடக்கில் குறிப்பாக வளலாய்,இடைக்காடு, பத்தைமேனிப் பகுதிகள் மீது புக்காரா விமானம் ஒன்று காலை 9.30 மணியளவில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ரோந்து சுற்றிய உலங்குவானூர்தி மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

## ஒருவர் பலி; உபகரணங்கள் சேதம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைப் பகுதிகளில் ரோந்து சுற்றி கலிபர் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் பலியானார்.

நேற்றுக் காலை 8.25மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில்காரைநகர் வெடியரசன் வீதியை சேர்ந்தவரும் இடம்பெயர்ந்து தற்போது பினவத்தை வட்டுவடக்கு, சித்தன்கேணியில் வசிப்பவருமான ஐயம்பிள்ளை என்றழைக்கப்படும் ஐந்து பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி தம்பிஐயா (வயது 50) என்ற மீனவரே மரணமானவராவார்.

இறந்தவரும், வேறு சில மீனவரும் திருவடிநிலைக்கடலில் தொழில் செய்ய செல்வதற்கு கரையில்நின்று ஆயத்தமான வேளையே இப் பரிதாபகரமான சம்பவம் நேரிட்டதெனவும், காயப்பட்டு சுயநினைவற்ற நிலையில் சக மீனவர்களால் யாழ். போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளை அங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# சினைப்பர் தாக்குதலில் காவலரண் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை நடந்த இந்தச் சம்பவத்தினை வவுனியா இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க தவறும் பட்சத்தில் முஸ்லிம் கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்படும் என்றும் முஸ்லிம் மக்களை அவர்கள் அச்சுறுத்தி இருப்பதாகவும் இது முஸ்லிம் வாக்காளர்களை பீதியடையச் செய்துள்ள நிகழ்வாகவே கருத முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்,

வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் இதற்கு பின்னணியில் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். அமைச்சர் என்ற பலத்தை பொலிஸாருடன் இணைந்து பாவித்து முஸ்லிம் மக்களுக்கு பல இன்னல்கள் ஏற்பட வைத்துள்ளதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அனுப்பி வைக்க குழு

## வடபகுதி அஞ்சல் அதிபர் நாயகம் தகவல்

(நமது நிருபர்)

கொழும்பிலிருந்து வெளிநாட்டு, உள்நாட்டுத் தபால்களை யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட விசேட குழுவொன்று ஏற்படுத்தப்படவுள்ளது. இக் குழுவிற்கு தலைவராக அஞ்சல்மா அதிபர் டி. திசநாயகம் இருப்பார் என வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கொழும்பில் இருந்து வரும் ஒவ்வொரு உணவுக் கப்பலிலும் தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கிருந்து புறப்படும் ஒவ்வொரு கப்பலிலும் தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, தபால் தந்தி அமைச்சின் செயலாளர் அசோகா குணவர்த்தன, அஞ்சல்மா அதிபர் நாயகம் டி. திசநாயகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டதாக மேலும் அவர் கூறினார். (பா)

# மக்களுக்கெதிரான சமூகக்குற்றங்கள் பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளன

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல்துறை உருவாக்கம் பெற்று கடந்த இரண்டு வருட காலத்தில் மக்களுக்குப் பெரும்சவாலாக இருந்த பல சமூக குற்றங்களை மக்களின் ஒத்துழைப்புடன் வெகுவாக குறைத்துள்ளதாக தமிழீழ காவல் துறையினரின் அறிக்கையொன்று கூறுகிறது.

இது தொடர்பாக காவல் துறைப்பொறுப்பாளர் திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கையின் முழு விபரமும் வருமாறு;

தமிழீழ காவல்துறை உருவாக்கம் பெற்று கடந்த இரண்டு வருட காலத்தில் யாழ். குடாநாட்டில் ஒன்பது காவல் பணிமனைகளும், நான்கு விசேட பிரிவுகளும், வன்னிப் பிராந்தியத்தில் நான்கு காவல் பணிமனைகளும் திறக்கப்பட்டு தமது பணியை மேற்கொண்டுவருகின்றன. போர்க்கால சூழ்நிலையில் சிங்கள அரசின் பொருளாதாரத் தடை, இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஏற்படும் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகள் ஆகியவற்றை முறியடித்து சமாதானமும், சமூகநீதியும்கொண்ட ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தமிழீழ காவல்துறை செயற்பட்டு வருகின்றது. இப்போர்க்கால சூழ்நிலையில் இவ்வாறு நாம் செயற்படும்போது, நாமும் எமது மக்களும் பலவிதமான சோதனைகளுக்கு முகங்கொடுக்கின்றோம். இச் சோதனைகளுக்கு மத்தியில் செயற்பட்டு, எமது மக்களுக்கு பெரும் சவாலாக இருந்த பல சமூக குற்றங்களை பெரியளவில் வெற்றிகரமாக குறைத்துள்ளோம். விடுதலைக்காகப் போராடும் எமது மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட தமிழீழ காவல்துறையின் கடந்த இரண்டு வருடகால செயற்பாட்டினை புள்ளிவிபர அடிப்படையில் எமது மக்களுக்கு அறியத்தரு

(4ஆம் பக்கம் பார்க்க)


ஈழநாதமே!

நீ வாழிய பல்லாண்டு.

சகலவிதமான எலெக்ரோனிக் மின்சாரப் பொருட்களின் முன்னோடி நிறுவனம்

மின்வளம்

இல.81,கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

(ஓ-8660)

# வரி விளம்பரம்

## வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா விடை ஆண்டு 9 ஆக்கம்:- க. சந்திரசேகரம் ஏகவிநியோகஸ்தர்கள்:-(1)சோதி புத்தகசாலை கச்சாய் வீதி, சாவகச்சேரி, (2)ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, 235,காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (7528)

## தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருட்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும்: தொடர்பு: மின்வளம் இல,81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

## விற்பனைக்கு

ஹோட்டலுக்குத் தேவையான தளபாடங்கள், கண்ணாடி சோக்கேஸ், கண்ணாடி றாக்கை, இரும்புக் குழாய் மேசைகள், இரும்புக் குழாய் குசன் கதிரைகள், எம்மிடம் உண்டு. தொடர்பு: இம்மானுவல்,றெஜிபேனாட், பீச்றோட்,1-ம் ஒழுங்கை, 10 A, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (7544)

## முக்கிய அறிவித்தல்

மக்கள் தடுமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீ காந்தா அச்சக வேனிலேயே இயங்குகின்றது. (7502)

## வான் விற்பனைக்கு

L.D வான் விற்பனைக்குள்ளது. தொடர்பு-மில்க்வைற் (சி-8661)

## O/L & YR. 10 விஞ்ஞானம்

O/L & YR. 10 விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன ஆசிரியர்- J.R சூரி, சம்றொக், யாழ்.சுண்டுக்குளி (7542)

## O/L & YR. 10 கணிதம்

O/L & YR. 10 கணித வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன ஆசிரியர் B. தயாளன் சம்றொக், யாழ். சுண்டுக்குளி (7543)

## தமிழ் தட்டச்சுப்பொறி விற்பனைக்கு

தமிழ் தட்டச்சுப்பொறி (ERIK \) விற்பனைக்குள்ளது. ''மில்க்வைற்'' (சி-8649)

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (7547)

## அனுபவமுள்ளவர்கள் தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டுவதில், பூப்போடுவதில் அனுபவமும், திறமையும் உள்ளவர்களிடமிருந்தும், ஆண்பிள்ளைகளுக்குரிய சேட், காற்சட்டைகள் தைப்பதிலும், பிறா வெட்டுவதிலும், தைப்பதிலும் திறமையும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

"சிற்றி காமென்ஸ்"

பலாலி வீதி,

திருநெல்வேலி சந்தி,

விண்ணப்ப முடிவுத் திகதி: 25 - 2 - 1994

(7548)

## ஆண் அச்சுக்கோப்பாளர் தேவை

அச்சக நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த ஆண் அச்சுக்கோப்பாளர் தேவை.

விள இல. மே | பா 313

ஈழநாதம்

யாழ்ப்பாணம்.

(7546)

யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 1994

### விடுமுறைச் சந்தை:

### இடம்: மின்சார நிலைய வளவு

25-02-94-ந் திகதி முதல் 31-05-94-ம் திகதி வரையான காலங்களுக்கு மின்சார நிலைய வளவு பழைய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகாமையில், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் இடங்களை குத்தகையில் விடுவதற்கு, அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால், 23.2.94 ஆந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும். கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 50-00-ம் செலுத்துவதன் பேரில், 22-2-94ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி. பகல் 3 00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள்......... ''விடுமுறைச் சந்தைக்கான கேள்வி'' என எழுதப்பட்ட கடித உறையில் இட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 23-02-94ஆந் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இட விபரம் | கேள்விப் பிணைப் பணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|
| சதுரத்துண்டுகள் 22 | 250/- | 50/- |
| வட்டத்துண்டுகள் 18 | 250/- | 50/- |

வே. பொ. பாலசிங்கம்

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15.02.94

(சி-8656)

இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின்

# 14-வது இசைவிழா

7-ம் நாள் 18-2-94

புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

20-02-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெறவிருப்பதால் பழைய மாணவர்களை அன்போடு அழைக்கிறோம்.

(7533) அதிபர்.

## 45-ம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில்:

09-03-1975

தமிழீழ மண்ணில்:

05-01-1994

அச்சுவேலியில் 05-01-94-ல் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட

### கப்டன் மதி

(பரஞ்சோதி கணேசமூர்த்தி)

வாரிவளவு, காரைநகர்

காயும் பூவுமென காவுதிரும் நிலைபோல்
தாய்மண் நிலைகண்டு தனயன் நீ புறப்பட்டாய்
பாயும் புலியானாய் பகைவீழச் செயற்பட்டாய்
சேயுன் நிலைகண்டு செருக்குற்றோம் தலைநிமிர்ந்தோம்

ஓயும்வரை கொள்கை உயிர்மூச்சாய் கொண்டவனே
தீயின் ஒரு குஞ்சே திருவிளக்கின் ஒரு சுடரே
நீயுன் கடன் முடித்து நிம்மதியாய் உறங்கையா
நேயத் தமிழீழம் நிச்சயமாய் நாம் காண்போம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 45-ம் நாள் நினைவு நிகழ்வில் சக போராளிகளை கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

# மனைப்பொருளியல் வகுப்புக்கள்

(DIPLOMA IN HOME ECONOMICS)

**உங்களுக்கான எமது புதிய பாட விதானங்கள்!**

- Dress Making - ஆடை அலங்காரம் ✻
- Food Cookery - சிற்றுண்டி தயாரித்தல் ✻
- Hair Dressing - தலையலங்காரம் ✻
- Cake Decoration (Icing) - கேக் ஐசிங் ✻
- Handicraft - கைவேலை ✻
- Macrame - மக்ரம் ✻

அத்துடன்

✻ Flower Making - மலர் அமைப்பும் அலங்காரமும்

வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. PETER'S LANE, JAFFNA.

(சி-8659)

---

யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1994

கீழ்க்காணும் விபரங்களையுடைய கடைகளுக்கு கேள்வி கோரப்படுகிறது :-

| | | கேள்விப்பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| **1. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை** | | | |
| கடை இல: 08 | 1 வருடம் | 2500/- | 4166/- |
| கடை இல: 09 | 1 வருடம் | 2500/- | 4416/- |
| **2. நாவாந்துறை கோழிக்கடை** | | | |
| கடை இல; 10 | 1 வருடம் | 2500/- | 4166/- |
| **3. பஸ் நிலையக் கடை:** | | | |
| கடை இல: 18 ஏ | 5 வருடங்கள் | 2500/- | 18,000/- |

கேள்விப்படிவம் வழங்கும் திகதி: 22-2-94 செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00
கேள்வி ஏற்கும் திகதி: 23-2-94 புதன்கிழமை நண்பகல் 12.00 வரை

தபாலில் அனுப்பப்படும் கேள்விகளின் தாமதத்திற்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.
மேலதிக விபரங்களை நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்:
யாழ்.மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1994-02-16

(சி-8653)

---

# வெள்ளிக்கிழமை

## ரூபன் வர்த்தக நிலையத்தின் ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

வீ. கே. நம்பிராஜன் )
எஸ். செல்வம் ) நாதஸ்வரம்
எம். எஸ். விஜயகுமார் )
எம். எஸ். சதீஸ்குமார் ) தவில்

**5.00 - 5.10 மிருதங்க இசை**

ஜே. சங்கர்
கே. றுசாங்கன்

**5.10 - 5.30 பாட்டு**

பி. அபர்ணா எஸ். சிவப்ரியா )
பி. வைதேகி எஸ். கானப்ரியா )
இ. காயத்ரி கே. தனுஷன் ) பாட்டு
எஸ். சுபாஷினி எம். விபுலானந்தன் )
என். அபிராமி )

எஸ். சுகன்யா - வயலின்
யூட் எமில்ராஜ்- மிருதங்கம்

**5.30-5.45 வீணை இசை**

ரி. சிவரதி )
இ. வாமதி ) வீணை
எஸ். அனுஷா )

எஸ். ஹரிதரன் - மிருதங்கம்

**5.45 - 6.15 வயலினிசை**

கௌசல்யா சுந்தரம்பிள்ளை - வயலின்
எஸ். துரைராஜா - மிருதங்கம்
பி. ரதிரூபன் - கடம்

**6.15 - 7.00 பாட்டு**

சாரதா சச்சிதானந்தம் - பாட்டு
சாந்தநாயகி சுப்ரமணியம் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

திரு. த. அன்னலிங்கம் (மற்றா பேணிச்சர்)
திரு. இ. காந்தரூபன் (ரூபன்ஸ் வர்த்தக நிறுவனம்)
திரு. எஸ். ஞானரூபன் (வர்த்தகர்)
திரு. எ. ஜி. செல்வராசா (செல்வராசா எரிபொருள் நிலையம் திருநெல்வேலி)

தலைவர்:- அருட்திரு அன்னப்பா ஜெயக்குமாரன் (தென்னிந்திய திருச்சபை)
பிரதம விருந்தினர்:- அருட்பெருந்திரு.எஸ்.ஜெபநேசன் (பேராயர் தென்னிந்தியதிருச்சபை)
சிறப்பு விருந்தினர்:- எஸ். கனகசபை (பொறியியலாளர்)
டாக்டர் சிவபாதநாயகி கனகசபை

**7.30 - 8.30 புல்லாங்குழலிசை**

டாக்டர் ரி. கெங்காதரன் ) புல்லாங்குழல்
வீ. கே. பஞ்சமூர்த்தி )
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

''பரத கலாகேந்திரா மாணவிகள்''
தயாரிப்பு: வஸந்தி குஞ்சிதபாதம்

**வாழ்த்துவோர்:**

## அருண் களஞ்சியம்

திருநெல்வேலி சந்தை, திருநெல்வேலி.

(சி-8655)

---

...கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவால் துயருறும் அன்பின்,

இல. 554, கமால் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

தாய், சகோதரர்கள்

(7501)

---

# நினைவு கூருகின்றோம்.

## 1994-02-18

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தங்கவேலாயுதபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரவிக்குமார்** (ம. புண்ணியமூர்த்தி - தம்பிலுவில்-1 அம்பாறை)

அம்பாறை - கல்முனை, சம்மாந்துறைப் பகுதியிற் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

தமிழீழக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழக் கடற்றொழிலாளி.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

✻ **தாடி** (குணசேகரம் கந்தசாமி - பூனகர், மூதூர் - திருமலை)

1988ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

✻ **ஆறுமுகம் சச்சிதானந்தம்** (தங்கநகர், கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

1990ஆம் ஆண்டு வசாவிளான் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப் பிரிந்த -

**ஜெகதாஸ்** (சித்திரவடிவேல் கெங்காதரன் - சாதியத்தோட்டம்,கரவெட்டிமத்தி-யாழ்)

1993ஆம் ஆண்டு மட்டு - கரடியனாறு, சித்துள் என்னும் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**புரோகிதன் கெக்குலர்** (வேலு மகேந்திரன் - நிந்தவூர்-07 - அம்பாறை)

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சுபத்திரன்: சூரி** (நல்லதம்பி செல்வநாதன் - சந்திவெளி - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

✻ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8652)

சிந்தனைக்கு

அச்சத்தினால் பலன் ஏற்படலாம்; ஆனால், கோழைத்தனத்தால் பலன் எதுவும் ஏற்படாது.

-- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# தொடரும் துரோகம்

கிழக்கு மாகாணத் தேர்தல் பற்றி எதிர்பார்த்தது போலவே பல தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. துப்பாக்கி முனையில் சிறிலங்கா இராணுவம் ஒரு தேர்தலை நடத்த முற்பட்டுள்ள அதேவேளை, ஒரு புறம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை, மறுபுறம் தேர்தலில் பங்குபற்றாவிட்டால் பழிதீர்க்கப்படுவீர்கள் என்ற அச்சுறுத்தல் என இராணுவ தர்பார் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்தவகையில், இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் மக்களை மைதானத்திற்கு அழைப்பதும், தேர்தலில் பங்குபற்றுமாறு வற்புறுத்துவதும், அகதிமுகாம்களை முற்றுகையிட்டு தேர்தலில் பங்குபற்றாது விட்டால் நிவாரணம் வெட்டப்படும் என எச்சரிப்பதும், வாக்களிக்கத் தவறினால் பின்னர் பார்த்துக் கொள்ளப்படும் என மிரட்டுவதும் சாதாரண விடயங்கள் ஆகிவிட்டன.

இதற்கும் மேலாக, நடைபெறுவது தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு இராணுவ அதிகாரிகள் வற்புறுத்துவதாகும். ஆனால் இவை யாவும் எதிர்பார்க்கப்பட்டனவாகையால், இதில் ஆச்சரியப்படவோ, அன்றி அதிர்ச்சி அடையவோ ஏதுமில்லை.

ஆனால், இத்தேர்தலில் தமிழ்க்கட்சிகள் / தமிழ்க் குழுக்கள் எனக் கூறிக் கொண்டு சிலர் பங்குபற்றுவது தான் அபாயகரமானதாகும். இவர்கள் இத்தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் ஒருபோதும் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் ஆகிவிட முடியாது. ஆனால், தமிழ் மக்

# ராணுவ முகாமிற்கு அருகிலுள்ள விவசாயிகளுக்கே உரம் கிடைக்கும்

## கிழக்கு மாகாண இணைப்பதிகாரி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்களுக்கு ஒன்றரை மைல் சுற்றளவில் உள்ள வயல்களுக்கு மட்டுமே யூரியா விசிற அனுமதி கொடுக்கப்படும் என கிழக்கு மாகாண இணைப்பதிகாரி ரோகான் குணவர்தனா அறிவித்துள்ளார்.

இதேசமயம் படுவான்கரை பிரதேசத்தில் ஒரு வீட்டில் ஐம்பது மூடைகளுக்கு மேல் நெல் வைத்திருக்க முடியாது. இதற்கும் பிரிகேடியரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வயல்களில் தங்கியிருப்போர், வேலை செய்வோர் பற்றி அருகிலுள்ள இராணுவ முகாம்களில் பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறுவடை செய்துகொண்டு வரும் நெல் ஏக்கருக்கு முப்பது மூடைகளுக்கு மேல் கொண்டு வர முடியாது. அதுவும் இராணுவ முகாம்களில் இவற்றின் எண்ணிக்கை காட்டப்பட வேண்டும். உரியவரின் காணியில் அவரே பயிரிடவேண்டும் வேறு எவரும் பயிரிட்டால் கைதுசெய்யப்படுவர் எனவும் நெல் ஆலை உரிமையாளர் பிரிகேடியரிடம் பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# மக்கள் அனைவரையும் வாக்களிக்க செய்வோம்

## கிழக்கு ராணுவ இணைப்பதிகாரி

(மட்டக்களப்பு)

முதலாம் திகதி கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கச் செல்லாது வீடுகளில் முடங்கியிருக்கும் வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல இராணுவம் நடவடிக்கையில் ஈடுபடும். ஆனால் தேர்தலில் இராணுவம் நேரடியாக தலையீடு செய்யாது என கிழக்கு இணைப்பதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்: ''வாக்குச்சாவடி பாதுகாப்பில் பொலிசார் ஈடுபடுவர். வாகரையில் மட்டும் இராணுவம் நேரடியாக வாககுச்சாவடியைபாதுகாக்கும் அந்நியப்படைகள் ஏற்கனவே இங்கிருந்து நடத்தியதைப் போன்ற ஒரு தேர்தலை நாம் நிச்சயம் நடத்த மாட்டோம் என்றும் பிரிகேடியர் ரோகான் குணவர்தன கூறினார்.

# வரவு செலவுத் திட்ட நிதி மாவட்ட மட்டத்தில் ஒதுக்கீடு

(நமது நிருபர்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி இவ்வாண்டு மாவட்ட மட்டத்திலேயே ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது.

1994ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியானது, பாராளுமன்ற உறுப்பினர்கள் அடையாளம் கண்ட செயல் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 2.5 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் உள்நாட்டு அமைச்சிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இவற்றை செயற்படுத்தும் பொறுப்பு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடமே இருக்கும். 1993இல் பிரதேச செயலக வாரியாக அபிவிருத்தி வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முக வரவு செலவுத் திட்ட முறை கைவிடப்பட்டு தற்போது அதற்கு முன்புள்ள முறையே மீளவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. சி நாகையா தலைமையில் இடம் பெறும்.

இவ் இலல விளையாட்டுப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக திருமதி றெ. இநகயநாதன் உதவிக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஐ. மனோகரனும், திரு. தி. இளந்திரையனும் (ஆனைக்கோட்டை சிற்றூர் பொறுப்பாளர்) கௌரவ விருந்தினராக வணக்கத்துக்குரிய பிதா. ர்மகுலசிங்கமும் கலந்து கொள்வார்கள். (05)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு சிற்றூழியர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் பெண் அமைய சுத்திகரிப்பு சேவையாளர்களை தெரிவு செய்வதற்காகநேற்று நடந்தநேர்முகப் பரீட்சையில் 15பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றே அனுப்பப்பட்டுள்ளன இவர்கள் இன்று முதல் பணிபுரிய உள்ளதாக தெரிவிக்கப்பட்டது,

மேற்படி பதவிக்கு 75பெண்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றினர் எனவும் இவர்களில் 15 பேர் தெரிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை ஆண் அமைய சுத்திகரிப்பு சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது. இவர்களில் 15பேர் தெரிவு செய்யப்படஉள்ளனர். இவர்களும் உடனடியாக சேவையில் அமர்த்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# துவிச்சக்கரவண்டி திருட்டு 3000 ரூபா அபராதம்

(வடமராட்சி)

துவிச்சக்கரவண்டி ஒன்றை களவாடியவருக்கு பருத்தித்துறை நீதிமன்று தண்டமாக 3000 ரூபாவை குற்றப்பணமாக செலுத்துமாறு கட்டளையிட்டது.

உடுப்பிட்டி கண்ணாமலையைச்சேர்ந்த வைத்திலிங்கம் ஸ்ரீதர் ஒரு பெண்மணியின் துவிச்சக்கர வண்டியை களவாடிய குற்றத்திற்காகவே தண்டம் அறவிடப்பட்டது.

கரணவாய் சுந்தரம்-புனிதவதியின் துவிச்சக்கரவண்டியை களவாடிய நபரை வல்வெட்டித்துறை காவல்துறையினர் நீதிமன்றில் ஆஜர் செய்ததையடுத்து இக்குற்றம் அறவிடப்பட்டது. (யோ)

# குப்பை கூழங்களை அகற்ற புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதிகளில் சேருகின்ற குப்பை கூழங்களை இலகுவான முறையில் வெளியகற்ற புதிய திட்டமொன்றை யாழ் மாநகர சபை மேற்கொள்ளவுள்ளது.

தற்சமயம் யாழ்நகரப் பகுதிகளில் சேருகின்ற குப்பை கூழங்களை வெளியகற்றுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதனால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இப்புதிய திட்டத்தின்படி வண்டில்கள் மூலம் குப்பை கூழாங்களை சிறிய வீதிகளில் இருந்து சேகரித்து பிரதான வீதியோரங்களின் சந்திகளில் குவிக்கப்படும் பின்னர் பிரதான வீதியூடாக வாகனங்கள் வந்து அவற்றை ஏற்றிச் சென்று உரிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்குமென அவர் தெரிவித்தார்.

இதற்கென ஒரு தொகுதி தள்ளுவண்டில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (யா)

# இந்தியாவில் உள்ளதைப் போன்ற சுயாட்சியை வழங்க அரசு மறுப்பும்

களுக்கு விளையப்போகும் பெரும் கேடுகளுக்குக் காரணமாக முடியும்.

இக்குழுக்கள் மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள அபிமானத்தை, தேர்தல் பிரசாரத்திற்குப் போக மறுத்ததையும் அதற்காக இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டதிலும் இருந்தே புரிந்துகொள்ள முடியும். அதாவது, தேர்தலில் வேட்பாளர்களாக குற்றவாளிகளையும், காடையர்களையும் நிறுத்தியுள்ள இக்குழுவினர், வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய வீடுவீடாகத் தேடுதல் நடத்துவதும், விரும்பியவர் பெயரை ஒலிபெருக்கியில் அறிவிப்பதும், அவர் வராதபோது சுட்டுக் கொல்வதும் இவர்களுக்கு தமிழ்மக்கள் மத்தியில் உள்ள ஆதரவையும், செல்வாக்கையும் வெளிக்காட்டும் அம்சங்களாகும்.

அத்தோடு, தமிழ்மக்களின் சுதந்திரத்திற்கான எந்தவித பங்கையும் இத்தேர்தலின் மூலம் இக்குழுக்களால் ஆற்றிவிட முடியாது. ஏனெனில், சிங்களப் பேரினவாதம் இவர்களுக்கு எதையும் வாரி வழங்கிவிடப் போவதில்லை. கடந்தகாலத்தில் இவர்கள் பெற்ற பாடமே இதை விளக்கப் போதுமானதாகும் ஆனால், தமிழ் மக்களிற்குத் துரோகத்தை மாத்திரம் போதிய அளவில் அவர்களால் ஆற்றிவிட முடியும்.

தமிழ்மக்கள் சுதந்திரமாக, பாதுகாப்பாக அவர்கள் விருப்பத்தின் பேரில் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாத நிலை இருக்கும் வரை தேர்தலில், தமிழர் தரப்பு எனக் கூறிக்கொண்டு போட்டியிடுவதில் பயன் ஏதும் இருக்கப் போவதில்லை. மாறாக, தமிழர்களுக்கு அவர்கள் செய்யும் துரோகமாகவே அது இருக்கும்.

ஏனெனில், இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது குரல்களை ஒலிக்கவோ, தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. ஆயுத முனையில், சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் தமிழ் மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். ஏன், சிங்களவர்கள் கூட கிழக்கில் சுதந்திரமாக வாக்களிக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கும்.

இந்நிலையில், தமிழர்கள் என்ற பெயரில் தேர்தலில் போட்டியிடுவது என்பது தமிழ் இனத்திற்குச் செய்யும் துரோகமாகவே அமையும். இதன் மூலம், சிங்களப் பேரினவாதம் தனது குறிக்கோளை எட்டுவதற்கும், தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதற்கும் அதற்கு ஏதுவாகப் பிரசாரத்தை மேற்கொள்வதாகவுமே இவை உதவ முடியும்.

கிழக்கு மாகாணத் தேர்தலில், ஐ. தே. க. அரசாங்கம் வெற்றியீட்டுவதற்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தியாக்கியபின்னரே இறங்கியுள்ளது. துப்பாக்கி முனையில் இடம்பெறவுள்ள இத்தேர்தலில், போட்டியிடும் தமிழ்க் குழுக்கள் எந்த வழிமுறையைக் கையாண்டாலும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பே கிட்டப் போவதில்லை.

ஆனால், தமிழ்க்குழுக்கள் இதனை அறியாமல் இல்லை. இருப்பினும் இவர்கள் தமது துரோகத்தனத்தைக் கைவிடப் போவதுமில்லை. ஏனெனில், இவர்களின் இத் துரோகத்தனத்திற்காகவே சிங்களப் பேரினவாதம் இவர்களுக்கு சோறு போடுகின்றது; 'தண்ணீர்' ஊற்றுகின்றது.

# வல்வைவைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் கஷ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலையையடுத்து இப்பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் மலேரியாபோன்ற ஆபத்தான நோய்கள் பரவிவருகின்றன. இந்நோய்க்கு இலக்காகி பலர் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந் நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தக்கூடிய வகையில் மருந்து வகைகள் இல்லாததினால் வைத்திய அதிகாரிகளும் நோயாளிகளும் பல கஷ்ட நிலையை எதிர் நோக்கி வருகின்றனர்.

வைத்தியசாலை வார்ட்டில் பல நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதோடு வெளி நோயாளர்கள் நாளொன்றுக்கு நூறுபேருக்கு மேல் சிகிச்சை பெற வருகின்றனர்.

கடந்த வருடத்திற்கான நாலாம் கந்தாயத்துக்குரிய மருந்துகள் கூட இன்னமும் வரவில்லையெனவும் அறிய முடிகிறது. (யோ)

# சடலத்தை எடுத்துச் செல்ல நோயாளர் நலன்புரி உதவி

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் மரணமடைந்ததை அடுத்து இவரது சடலம் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டின்பேரில் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

குருவில், உடையார் கட்டு முல்லைத்தீவைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சந்தனம் பெரியசாமி (வயது 32) என்பவரது சடலமே இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளது. இவர் செப்ரிசீமியா எனும் நோயினால் கடந்த 9ஆம் திகதி மரணமானார்.

இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட

# அரச, உற்பத்தித் துறையின் இழப்பு குறித்து மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட அரச மற்றும் உற்பத்தி துறைசார்ந்த அமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த கணக்கீடுகளை புனர்நிர்மாண. புனர்வாழ்வு சமூக நலன் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

இந் நடவடிக்கையின் கீழ் அரசாங்க மற்றும் சமூகநல அமைப்புகளுக்கு ஏற்பட்ட இழப்பீடும், விவசாயம், கடற்தொழில், கால்நடை, சுற்றுலா, போக்குவரத்து, வியாபாரம் போன்றவற்றுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட இழப்புகள் கணக்கீடு செய்யப்பட்டுவருகிறது.

இது தொடர்பான விபரங்கள் இம்மாத முடிவிற்குள் யாழ் புனர்வாழ்வு பிரிவிற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும.

## கருத்தரங்கு

இலங்கை திட்டமிடலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினால் ஒழுங்கமைக்கப்படும் கருத்தரங்கும் கலந்துரையாடலும் நாளை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (சி)

# சுயாட்சியை வழங்க அரசு முற்படும்

## வெளியுறவு அமைச்சர் ஹமீட் தெரிவிப்பு

(ரோக்கியோ)

இந்தியாவில் தற்போது உள்ளதைப்போன்ற ஒரு கட்டமைப்பிற்குள் சுயாட்சியை வழங்க சிறிலங்கா அரசு தயாராக இருப்பதாக வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார், அவர் ஜப்பானில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சரும் பிரதிப்பிரதமருமான குடோமு ஹடாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே மேற்படி தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசு இன்னமும் அரசியல் தீர்வுஒன்றை காணவே முயற்சிக்கின்றது. வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பான பல தரப்பட்ட சமரசப் பேச்சு வார்த்தைகளில் நானும் சம்பந்தப்பட்டிருக்கின்றேன் எனவும் அமைச்சர் ஹமீட் ஜப்பானிய அமைச்சருக்கு தெரிவித்தார்,

இலங்கைக்கு வர்த்தக வாய்ப்புகளை ஜப்பானில் இருந்து பெற்றுக் கொள்ளும் முகமாக அமைச்சர் ஹமீட் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி உதைபந்தாட்டச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10 00 மணிக்கு உதைபந்தாட்டப் பணிமனையில் நடைபெறும். (யோ)

## குஜராத் முதல்வர் மாரடைப்பால்மரணம்

(டில்லி)

குஜராத் முதலமைச்சர் திரு சிமென்பாய் பட்டேல் நேற்று மாரடைப்பால் மரணமானார்.

இவருக்கு வயது 65. மார்பு வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன் தினம் பின்னிரவு இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானார். இவரது சடலம் அங்கிருந்து காந்திநகரில் உள்ள அவரது அரச இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. விவசாய குடும்பத்தைச் சேர்ந்த இவர் 1973இலும் 1990 இலுமாக இருமுறை குஜராத் முதல்வராக பணியாற்றினார். இவர் மாணவராக இருந்த போதே அரசியலில் பிரவேசித்தவர். அதேவேளை பொருளாதார விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# வான்வெளி வளாகம் இந்திய அரசு முயற்சி

(டில்லி)

அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் வான்வெளி வளாகம் ஒன்றை அமைக்க இந்திய அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்த தகவலை இந்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் மல்லிகா ர்ஜுன் அண்மையில் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு விஜயம் செய்தபோது தெரிவித்தார்.

மற்ற நாடுகளைச் சேர்ந்த படகுகள் மீன்பிடித்தலில் ஈடுபடுவதைத் தடுக்கவும், சிறப்பான முறையில் வேவு பார்க்கவும் இது பயன்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அணுசக்திநிலையசோதனை வடகொரியா அனுமதி

(சியோல்)

அணுசக்தி கேந்திர மையங்களில ஏழு இடங்களை சர்வதேச ஆய்வாளர்கள் பார்வையிடுவதற்கு வடகொரியா அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், அணு ஆயுதங்களுக்கு தேவைப்படும் புளுட்டோனியத்தை உற்பத்தி செய்வதாக சந்தேகிக்கப்படும் இரண்டு கேந்திர நிலையங்கள் இதற்குள் உட்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுத திட்டங்கள் தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து அந் நாட்டின் மீது பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது தெரிந்ததே.

# தமிழக நீதிமன்ற வளவில் வழக்கறிஞர் மீது தாக்குதல்

(சென்னை)

சென்னையிலுள்ள நீதிமன்ற வளாகத்தினுள் தமிழக வழக்கறிஞர்கள் சிலர் கடந்தசெவ்வாய் தாக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தை கண்டித்துள்ள தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி இதன் மூலம் தமிழகத்திற்கு தலைகுனிவு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இச் சம்பவத்தை இந்திரா காங்கிரஸ் கட்சியின் வாழப்பாடி இராமமூர்த்தியும் கண்டித்துள்ளார்.

**பெய்யும் மழை நீர் பெயராதிருந்தால்**
**செய்யும் தொழிலும் சிறப்படையும்**

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# பதவி வெற்றிடம்

## பருத்தித்துறை பிராந்திய வெளிக்கள உத்தியோகத்தர்

01. கல்வித்தகைமை:-
க. பொ. த. (சா. த) பரீட்சையில் தமிழ், கணிதம்உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்
க.பொ. த. (உ. த) பரீட்சையில் வர்த்தகத் துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

02. விண்ணப்பதாரர்;
1993 ஜனவரி மாதத்திற்கு முன்பு சி.க.கூ. சங்க அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

03. யாழ் மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. வயதெல்லை:
18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. சம்பள அளவுத்திட்டம்:
209.15
(1030 - 20×10 - 25×5=1355)
ரூபா: 1174/- படி.
மாதாந்தம் ரூபா, 2204/-வுடன் பிரயாணப்படி ரூபா 500/-வும் வழங்கப்படும்.

06. விண்ணப்ப முடிவுத்திகதி:
24-2-1994

07. விண்ணப்பங்கள்:
சமாசக் காரியாலயத்திலும், கரவெட்டிப் பிராந்திய சபைக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

08. உரிய படிவத்தில் நிரப்பப்பட்ட பூரணமான விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

09) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**மாவட்டச் செயலாளர்**
**யாழ். மாவட்ட சி.க.கூ.ச. சமாசம்**
182½, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8664) பதில் மாவட்டச் செயலாளர்.


## சந்திப்பு

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவின் விசேட கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கோண்டாவில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல உறுப்பினர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஃ ஃ

வலிகிழக்கு வலயத்திலுள்ள விளையாட்டு கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சகல விளையாட்டுக்கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கின்றது.

## நாச்சிக்குடாவில்

என்பவராவார் இவர் 10பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. இவர் காலிலும் தலையிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

மேற்படி இக்குண்டுத்தாக்குதல் நடந்த தினத்திற்குமுதல் நாள் இதேபகுதியில் புக்காரா விமானம் மேற்கொண்ட குண்டுவீச்சு தாக்குதலுக்கு மூன்று பேர் உடல் சிதறி பலியானதும் 8 பேர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## ஊர்தி

ஆம் திகதிக்குப் பின்னர் முற்றாக இரத்துச் செய்யப்பட்டு விடும் என்பதையும்,

22-02-94ஆம் திகதிக்குப் பின்னர் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில்

## மக்களுக்கெதிரான

வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1992, 1993 ஆகிய ஆண்டுகளை மையமாக வைத்து இப்புள்ளிவிபரம் தரப்படுகிறது. குற்றச் செயல்களில் பாரிய குற்றங்கள் என கருதப்படும் குற்றங்கள் பற்றிய முறைப்பாடு யாழ். குடாநாட்டில் 1992-ம் ஆண்டில் 5242-ம், 1993-ம் ஆண்டில் 1832 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாரிய குற்றங்

## ஐ.தே.கவின்

இவற்றை இனிமேலும் பொறுக்கமுடியாத ஒரு நிலை இருப்பதாகவும், எனவே இப்பிரச்சினை ஓர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரவு வேளைகளில் கிராம சேவகர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு ஜனசவிய திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பணிக்கப்படுவதாகவும் இதற்கு பின்னணியில் அமைச்சரின் மனைவியொருவர் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வளவு இன்னல்களையும். துன்பங்களையும் கிழக்கு மாகாணம் ஏற்க வேண்டிய தற்கான காரணம் கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு இடத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி வெல்லமுடியாது என ஏற்பட்ட அச்சமே ஆகும்.

பொத்துவில், தமிழ் கோவில்தீவு, அட்டாளை சேனை நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை ஆகிய இடங்களின் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றியீட்டத் தவறுமாயின் தான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரோந்து

மரணமானார் எனவும், மற்றைய மீனவர்கள் காயங்கள் எதுமின்றி தப்பித்துக் கொண்டனர் எனவும், பல ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமதி

கள் 1992-ம் ஆண்டிலும் பார்க்க 1993-ம் ஆண்டு3410 ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கெதிரான குற்றச் செயல்கள் 1992-ம் ஆண்டில் 1397-ம், 1993-ம் ஆண்டில் 157-ம் பதிவாகியுள்ளன. இப் புள்ளிவிபரக் கணிப்பீட்டின்படி பெண்களுக்கெதிரான குற்றச் செயல்கள் 1992-ம் ஆண்டிலும் பார்க்க 1993-ம் ஆண்டில் 1240ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது.

வீதி விபத்து சம்பந்தமாக 1992-ம் ஆண்டில் 294வாகன விபத்துக்களில் 25 பேர் சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். 1993-ம் ஆண்டில்196 வாகன விபத்துக்கள் பதிவாகி 14பேர் சாவைத் தழுவிக் கொண்டார்கள். 1992-ம் ஆண்டிலும் பார்க்க 1993-ம் ஆண்டு வாகன விபத்துக்கள் 98ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. சாவடைந்தவர்களின் எண்ணிக்கையும் 11ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

இப்போர்க்கால சூழ்நிலையிலும் இவ்வாறு குற்றச் செயல்கள் பாரியளவில் வீழ்ச்சியடைவதற்கு காரணம், எமது மக்கள் தமிழீழ காவல் துறைக்கு அளித்த ஒத்துழைப்பும், பங்களிப்புமேயாகும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## கப்பல்

தேவையான பணத்தை கொண்டுவரப்படும் பொருள்களின் விலையை அதிகரிப்பதன் மூலமே பெறவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார் இதனால் மேற்படி கப்பலில் வரவுள்ள மா முற்றாக விற்பனைக்கு விடப்பட உள்ளதாகவும் ஒவ்வொரு கிலோ மாவிற்கும் 4ரூபா அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் இது பொது மக்களையே பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இக் கட்டணத்தை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரையே பொறுப்பேற்கும்படி தான் கேட்டுள்ளதாகவும் இது தொடர்பாக தான் மேலும் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (சி)

## விமானக்குண்டு

வளலாய் பகுதிக்கு வந்த இவ்விமானம் மூன்று குண்டுகளை குடியிருப்புக்கள் மீது வீசியது. பின்னர் அப்பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதிகள் மீது கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அதனைத் தொடர்ந்து பத்தமேனி இடைக்காடு பகுதிகளை நோக்கி பலாலியில் இரு


# நன்றி தெரிவிக்கின்றோம்

இறந்த திரு. சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை அவர்கள் சுகவீனமுற்றிருந்தபோது அவரைத் தங்கள் தந்தைபோல பரிவுடன் பராமரித்த திருச்சிலுவை சுகநல நிலைய பொறுப்பாளர், கன்னியர்கள், தாதியர்கள், திருச்சிலுவை மாகாணத் தலைவி ஏனைய கன்னியர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை
பற்றிமா ஜெயராஜா.

(7562)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 855

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-4501, 26-9992, 27-9489, 27-8155, 26-8839, 24-5418, 26-0672, 27-6769, 27-9161, 26-2070, 41-4129, 28-9449, 27-3946, 42-1320, 42-5556, 26-4726, 26-5882, 41-9112, 41-7109, 26-6062, 27-1255.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9649, 26-4896, 24-7961, 26-2764, 26-1658, 26-4610, 42-1722, 28-1730, 27-7656, 22-9764, 26-6848, 42-1623, 42-3495, 27-9105, 24-4361, 26-9186, 28-4672.


# 6-ம் மாத நினைவஞ்சலி,



பிறப்பு

182¼, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8664) பதில் மாவட்டச் செயலாளர்.

# ENGLISH TEACHERS' EXAMINATION - 1994

Week-end *Classes for the above examination will commence on Sunday, the 20th.*

**Time: 10 to 11.30 a. m.**

**Lectures:- Kandiah Navarendran.**

LUX IN TENEBRIS

**JAFFNA ENGLISH ACADEMY**

**27, Rakka Lane, Chundikuli Jaffna.**

(7553)

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் உபயகாரர்களின் பொதுக் கூட்டம்

இடம்; ஆலய மண்டபம்
காலம்: 27-02-1994ஞாயிற்றுக்கிழமை மு: ப. 10மணி
தலைவர்: திரு. வை. செல்லையா அவர்கள்

உபயகாரர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்;

பிரேரணைகள் இருப்பின் 22-02-1994ற்கு முன் ஆலய காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

நன்றி!

(சி-8666) தர்மகர்த்தாக்கள் சபை

## அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1-ம் | பரிசு | 1368 |
| 2-ம் | ,, | 1604 |
| 3-ம் | ,, | 7226 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 0810 | 4022 | 2907 | 2902 | 5265 |
| 3417 | 6030 | 6702 | 4653 | 4797 |

நன்றி

(7561) சமூக விஞ்ஞான மன்றம்

ஆம் திகதிக்குப் பின்னர் முற்றாக இரத்துச் செய்யப்பட்டு விடும் என்பதையும்,

22-02-94ஆம் திகதிக்குப் பின்னர் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவுக்குட்படுத்தாத சகல மோட்டார் ஊர்திகளும், மோட்டார் ஊர்திகளின் இயந்திரம், அடிச்சட்டம் என்பவற்றை வீதிகளிலும், வீடுகளிலும், தமிழீழ காவல் துறையினரும், தமிழீழமோட்டார் ஊர்தி பதிவாளரினால் அதற்கென நியமிக்கப்பட்டவர்களும் சட்ட நடவடிக்கைகளைமேற்கொள்வார்கள்என்பதனையும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றனர்.

ரோந்து

மரணமானார் எனவும், மற்றைய மீனவர்கள் காயங்கள் எதுமின்றி தப்பித்துக்கொண்டனர் எனவும், பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதி வாய்ந்த மீன்பிடி உபகரணங்கள் சேதப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது.

இத்தாக்குதல் சம்பவம் நிகழ்ந்து சற்று நேரத்தின் பின் சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம், தொல்புரம் பகுதிகளின் வான்பரப்பில் வந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் பலதடவை சுற்றி வட்டமிட்ட பின் குண்டு வீச்சை மேற்கொள்ளாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (41)

முடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அதனைத் தொடர்ந்து பத்தமேனி இடைக்காடு பகுதிகளை நோக்கி பலாலியில்இருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. பிற்பகல் 3.00 மணியளவிலும் மேற்குறித்த இடங்கள் மீது ஆட்லறி ஷெல்கள் விழுந்து வெடித்தன.

காலையில் புக்காரா விமானம் குண்டு வீசுவதற்கு முன் அப்பகுதிகளை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது. மாலை வரை விமானங்கள் அப்பகுதிகளை வட்டமிட்டவாறு இருந்ததை அவதானிக்க முடிந்தது.

அதே வேளை பருத்தித்துறை முனை கடற்பரப்பின் மீது ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்மீதும்கரையோரப் பகுதிகள் மீதும் பீரங்கித் தாக்குதலை நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு, மேற்கு பகுதிகள் மீது விமானத்தாக்குதல்களும், வடமராட்சி வடக்கு- கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதல்களும் கடந்த சில தினங்களாக தொடர்ந்த வண்ணமுள்ளன. (யோ)

## நன்றி தெரிவிக்கின்றோம்

எனது தந்தை திரு. சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளையின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட குருக்கள், கன்னியர் சகோதரர், சில்லாலை, அரியாலை தீவக பங்குமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் என் அன்பான நன்றிகள்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை குடும்பத்தினர்.

(7563)

## வாழ்த்துகிறோம்



சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தால், ஈழத்தின் மூத்த சித்த வைத்தியரான திரு. பேதுறு பிலிப்ஸ் அவர்கள், யாழ். சித்த மருத்துவபீட அரங்கில் 13-02-94 அன்று நடந்த பாராட்டு விழாவில் ''வைத்திய இரத்தினம்'' என்னும் பட்டமளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இவர் தன் சேவையை பல்லாண்டு காலம் ஆற்ற வாழ்த்துகிறோம்.

ஊழியர்கள்
ஆரோக்கிய வாசா வைத்தியசாலை,
மட்டுவில்.

(7545)



பிறப்பு
16-09-1967

இறப்பு
24-09-1993

## தவசி ஜெயராசா

இவரின் அந்தியேட்டி அழைப்பு நாளை மறுதினம் (20-02-94) அன்று இவரின் வீட்டில் நடைபெறும். மதிய போசனத்தில் சகபோராளிகளையும் நண்பர்களையும் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

சிறுப்பிட்டி தெற்கு, தந்தை: நல்லான் தவசி,
மிதியங்காடு, தாய்: பாக்கியம்
நீர்வேலி. சகோதரன்: சற்குணராசா
(7552) சகோதரி:- இராசேந்தினி.

# மரண அறிவித்தல்கள்

## பூதத்தம்பி கந்தையா

(இளைப்பாறிய வைத்தியர், பண்டாரவளை)

பூதத்தம்பி கந்தையா அவர்கள் (14-02-94) அன்று பண்டாரவளையில் காலமானார். இவர் நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவில் மேற்கைச் சேர்ந்த நாகபூசணியின் அன்புக் கணவரும் சிவானியின் அன்புத் தந்தையும் திரு. கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர் அத்தியார் இந்துக் கல்லூரி) திருமதி க. திலகவதி, திரு. குமாரசுவாமி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை (16-02-94) புதன்கிழமை பண்டாரவளையில் நடைபெற்றது. இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் மேற்கு, தகவல்:
சுன்னாகம். ஆ. சிற்சபேசன்
(7554) (சகலன்)

## ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை புங்குடுதீவில் 15-09-92ல் காலமாகி விட்டார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மட்டுவில் தகவல்:
திருமதி ஆ. இராசேந்திரன்
(சி-8658) (பேர்த்தி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.